# හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
## Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහ භාණ්ඩාගාරය, මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Economic Stabilization & National Policies , Colombo 01, Sri Lanka

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | +94 11 2484600<br>+94 11 2484700 | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | +94 11 2484970<br>+94 11 2320042 | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.treasury.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | TO/GR /Miscellaneous(iii) | ඔබේ අංකය<br>உமது இல<br>Your | | දිනය<br>திகதி<br>Date | 2024.11.25 |

*அமைச்சுக்களின் செயலாளர்கள்,*

*திணைக்களங்களின் தலைவர்கள்,*

*மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும்*

*மாவட்ட செயலாளர்கள் யாவருக்கும்,*

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்களுக்கான கட்டுநிதிக் கோரிக்கைகள்**

*2024 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளைத் தீர்க்கும் நடவடிக்கைகள் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றபடியினால், நிதிக் குறியீட்டு இல. 13 (வெளிநாட்டு மானியங்கள்) மற்றும் நிதிக் குறியீட்டு இல. 11 (உள்நாட்டு மானியங்கள்) ஆகியவற்றின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியச் செலவு விடயங்களுக்கான சகல கட்டுநிதிக் கோரிக்கைகளையும், 2024.12.24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத் தருகிறேன். அந்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானிய கட்டுநிதிக் கோரிக்கைகளுக்கு இந்த வருடத்தினுள் கட்டுநிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும், வெளிநாட்டு உதவிக்கான கணக்குகளைப் பேணுவது தொடர்பாக, 1994 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 30/94 இன் பிரகாரம், நடவடிக்கைகளை மேற்கொண்டு, வெளிநாட்டு உதவி தொடர்பான சகல செலவின அறிக்கைகளையும் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மாதிரிக்கு அமைவாக 2025.01.10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு மேலும் தயவுடன் அறியத் தருகிறேன்.*

*மேலும், 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தீர்ப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இல. 06/2022 மற்றும் 2024.11.04 எனும் தேதியிட்ட இந்தத் திணைக்களத்தின் வழிகாட்டுதலின்படி, 2024 ஆம் ஆண்டின் கட்டுநிதி இருப்பை மீண்டும் அனுப்பீடு செய்யும்போது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானிய கட்டுநிதி இருப்பு பற்றிய தகவல்களை, இந்தத் திணைக்களத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியப் பிரிவுக்கு ஒரு நகல் பிரதியைக் கொண்டதாக அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*ஒப்பம்:* ***ஏ.என்.ஹப்புகல***
***பணிப்பாளர் நாயகம்***